DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.21/2025
PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 15.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் வேலூர் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.12.2024ம் தேதி 11.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது நாமக்கல் மதுவிலக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் அறிவுரைகளை பெற்று நானும் தலைமை காவலர் 777 திரு.மோகன்குமார் என்பவரும் எருமப்பட்டி காவல் நிலைய சரகம் எருமப்பட்டி பன்னகாரன்பட்டி, காவக்கரன்பட்டி, எருமப்பட்டி, வரகூர் ஆகிய பகுதியில் மதுவிலக்கு மற்றும் போதை பொருள் குற்றதடுப்பு அலுவலாக கண்காணித்து சென்ற போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 07.12.2024ம் தேதி 15.00 மணிக்கு வரகூர் பஸ்ஸ்டாப் நூலகம் அருகே சென்ற போது அங்கு மறைவாக ஒரு கையில் பிராந்தி பாட்டிலுடன் சுமார் 45 வயது மதிக்க தக்க ஒரு நபர் நின்று கொண்டிருந்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரித்த போது அவரது பெயர் செந்தில்குமார் வயது 42 க.பெ.சீனிவாசன் 3/345 தாட்கோ காலனி, வரகூர் அஞ்சல், சேந்தமங்கலம் வட்டம் நாமக்கல் மாவட்டம் என்றும் அவர் ஒரு வெள்ளை நிற நைலான் சாக்குப்பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 180 மி.லி. அளவுள்ள Express Brandy-26 பாட்டில்கள் வைத்திருந்ததை பற்றி விசாரிக்க தான் பவித்திரம் பன்னகாரன்பட்டி, அருகே உள்ள டாஸ்மார்க் கடையில் சென்று குறைந்த விலையில் உள்ள மதுபான

பாட்டில்களை ஐந்தைந்தாக வாங்கி அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை மேற்படி நபரையும் அவர் விற்க வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 26 உடன் நிலையம் வந்து 16.00 மணிக்கு நிலையம் அழைந்து வந்து மேல்நடவடிக்கைகாக தனியறிக்கையுடன் நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலர் 1079 திரு.ரஞ்சித்குமார் அவர்களிடம் ஆஜர் செய்தேன். **(**அந்த தனி அறிக்கை அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

மேலும் தனியறிக்கையின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரி செந்தில்குமார் என்பவரை விசாரணை செய்த போது அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 16.30 மணிக்கு கைதுகான காரணம் கூறி நிலையத்தில் வைத்து கைது செய்தும், பின்னர் நானும் என்னுடன் தலைமை காவலர் 777 திரு.மோகன்குமார் எங்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்தையோ, வற்புறுத்தலோ தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.45 மணிக்கு பதிவு செய்தும் அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **(**ஒப்புதல் வாக்குமூலதத்தில் உள்ள முதல் கையெழுத்து அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** எதிரி விற்க வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் ஆன சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Express Brandy-26 பாட்டில்களை ஆஜர் செய்ததை காலை 17.15மணிக்கு நானும் என்னுடன் தலைமை காவலர் 777 திரு.மோகன்குமார் ஆகிய எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்று மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். **(**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

பின்னர் 08.12.2024 ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் பார்வை மகஜர் தயார் செய்தும், அதில் பொது ஜன சாட்சிகள் முன்வராததால் நானும் என்னுடன் தலைமை காவலர் 777 திரு.மோகன்குமார் ஆகிய எங்கள் முன்னிலையில் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளாக நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யபடுகிறது**).** இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. ரகசிய தகவல் கிடைத்தது. எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் ரசீது ஏதும் இல்லை ஆனால் அந்த ஊழியரை விசாரித்தோம். மேற்படி ஊழியரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது எதிரி போலிசாரின் பொறுப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**